
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 5 | டிசம்பர் 1992 | இதழ் 12



வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் திருமறை ஆசானின் புத்தாண்டு வாழ்த்துக்கள்

1993-ம் ஆண்டு முழுவதும் வளமுடனும் நலமுடனும் வாழ்ந்து பெருக வாழ்த்தி வணங்குகிறோம்.

## தலைப்புச் செய்திகள்


1. சத்தியத்தை அறியுங்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும் 1 - 5

2. கட்டளைகளும் முன் உதாரணங்களும் 6 - 9

3. மனமுறிவை மனதிலும் நினைக்கவேண்டாம் 10 - 13

4. விரைந்து வரும் நியாயத் தீர்ப்பு நாள் 14 - 20

5. ஏனென்றால் நான் அவருடைய சீஷன் 21 - 22

6. கிசுகிசுவிலும் நன்மை 23 - 24

7. கைகளோ ஏசாவின் கைகள்; சத்தமோ யாக்கோபின் சத்தம். 25 - 28

# THIRUMARAIAASAAN

Editor
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

✻ ✻ ✻

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamilnadu, India:
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 5 December—1992 Issue 12


**ஆசிரியவுரை**

## சத்தியத்தை அறியுங்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இன்றைக்குக் கிறிஸ்துவ உலகம் அசலுக்கும் போலிக்கும் வித்தியாசம் தெரியாமல் குழம்பி நிற்கிறது. ஆரோக்கியமான உபதேசம் எது கள்ள உபதேசம் எது என்று தெரியாமல் எவர் சொன்னாலும் ''ஆமாம்'' போட்டுக் கொண்டு இரட்சிப்பையும் நித்தியஜீவனையும் குறித்து நிர்விசாரமாயிருக்கின்றனர். அதைக் குறித்து வேத எழுத்துக்களின் வழியாக எவ்வளவோ எச்சரிப்பு-களையும் அறிவுரைகளையும் கொடுத்து அதன் அபாயத்தை பரிசுத்த ஆவியானவர் விளக்கி இருக்கிறார்.

இருந்த போதிலும் மக்கள் வேதாகமத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை ஊன்றிப் படிப்பதில்லை. படித்தாலும் அதைக் கடைப்பிடிப்பதில்லை. அதற்கு என்ன ககரணம்? ஒரு காலத்தில் செல்வந்தர்களும் வசதிபடைத்தவர்களுமே வாங்கக் கூடிய அளவில் விலை அதிகமாக இருந்தது. ஆனால் அச்சு யந்திரம் கண்டுபிடிக்கப் பட்டு மலிவு விலையில் வேதாகமங்கள் கிடைத்துக் கொண்டிருக்-கும் இந்த நாளிலும் கூட பெரும்பான்மையோர் வேதாகமப் படிப்பை அலட்சியம் செய்கின்றனர். சூது மதியினரும் சுய நலமி-களும் இவர்களின் மெத்தனததை பயன்படுத்தி வஞ்சித்து வாழ்கின் றனர். அப்படி மக்கள் அசிரத்தையாக இருப்பதற்கு அவர்கள் சொல்

லுகிற காரணங்கள் வீண்சாக்குபோக்குகளேயல்லாமல் நியாயமான வைகள் அல்ல. வேதாகமத்தை படிப்பதினால் ஏற்படும் நன்மைகளை அவர் உணர்ந்து கொள்ளாததே அதற்குக் காரணம். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கல்வியைப் பற்றியும் இவ்வாறே அக்கறை அற்றவர்களாகவே மக்கள் இருந்தனர். அறியாமையைப் போக்க அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியும், படித்து நல்ல உத்தியோகங்களில் அமர்ந்து கை நிறைய சம்பாதித்து வாழ்க்கையில் வசதியும் சௌகரியமும் ஆக இருக்க முடியும் என்பதை விளங்கிக் கொண்ட பிறகு, இன்றைக்கு மிக மிகச் சாமானியமானவர்கள் கூட அரசு நடத்துகிற பள்ளிகளைக் கூட புறக்கணித்து விட்டு பெரும்பணம் செலவு செய்து பிள்ளைகள் பிறப்பதற்கு முன்னே பதிவு செய்து, பால் மறப்பதற்கு முன்பே கொண்டுபோய் பள்ளியில் சேர்க்கிறார்கள். குழந்தையோடு தாயாரும் சில வேளைகளில் தகப்பனாரும் பள்ளிக்குச் சென்று வருவதையும் பார்க்கிறோம். அதுபோதாது என்று ட்யூஷன் வேறு வைத்துக்கொள்கிறார்கள். ஏனெனில் கல்வியினால் கிடைக்கும் நன்மைகளைப் புரிந்து கொண்டார்கள்.

அது போல வேதாகமத்தைப் படித்துத் தியானிக்கிற குடும்பங்களில் காணப்படுகிற மெய்ச் சமாதானம், மகிழ்ச்சி, இல்லாமையிலும் ஓர் நிறைவு, வறுமையிலும ஒரு திருப்தி ஆகிய நற்பண்புகளைக் கவனித்துப் பார்த்தால் அவர்களுடைய மகிழ்ச்சிக்கும் மன நிறைவுக்கும் தேவன் மேல் அவர்கள் கொண்டிருக்கிற விசுவாசமே காரணம் என்பது புரியும். ஆனால் ஏனோ மனித குலம் அமைதியையும் சாமதானத்தையும் விட. ஆடம்பரத்திலும், பகட்டு வாழ்க்கையிலும் நாட்டம் கொண்டு அமைதியும் எளிமையும், கொண்ட வேதாகம வழிகளைப் புறக்கணித்து விட்டுத் தீமை செய்ய திரளாக ஜனங்களைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள்.

வேதாகமத்தைப் படித்து ருசித்துப் பார்த்த சான்றோர்கள் நீங்கள் வேதாகமத்தைப் படித்து தியானிப்பதின் மூலம் ஆண்டவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று கூறிக் கெஞ்சி மன்றாடினாலும், "நாங்கள் என்ன ஐயர் வேலைக்கா போகப் போகிறோம்" என நையான்டி செய்கிறார்கள், இது மிக ஆபத்தான போக்கு. போதகர் வேலைக்குப் போகிறவர்கள் தான் வேதாகமத்தைப் படிக்கவேண்டும், மற்றவர்கள் போதகர்கள் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டு வாரம் ஒரு முறை கோவிலுக்குப் போய் விட்டு வந்தால் போதும் என்பது தவறான போதனைகளின் விளைவே. "நாம் ஒவ்வொருவரும் தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்கொப்பிக்க வேண்டும்". என்று ரோமர் நிருபத்திலும் (ரோ-14:12) "சரீரத்தில் அவனவன்

செய்த நன்லமக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்'', என்று கொரிந்தியருக்கு எழுதின நிருபத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. (2கொரி. 5:10)

இவைகள் கூறுகிற உண்மை என்ன? நியாயத்தீர்ப்பு நாளிலே போதகரோ, பிஷப்போ, போப் ஆண்டவரோ, தலைமைப் போதகரோ, நமக்காக பரிந்து பேச முடியாது. நாம் தேவனுடைய ஆலோசனைகளை கவனமாகப் படித்து அதன்படி ஒழுகவேண்டும். அவர்கள் சொன்னார்கள், இவர்கள், உபதேசித்தார்கள் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது. வசனத்தின்படிதான் தீர்ப்பு (யோவான் 12;48) வேறு சிலர் வேதாகமத்தைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு எங்களுக்கு ஞானமில்லை. நீங்களே படித்துச் சொல்லுங்கள் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் என்கின்றனர். இது ஒரு மாயானமான தாழ்மையே. இது கம்யூட்டர் யுகம். விஞ்ஞானம் அளப்பரிய முன்னேற்றம் அடைந்து பெரும் சாதனைகளை புரிந்து கொண்டிருக்கிறது. அதன் நுணுக்கங்களையெல்லாம் கற்றுத் தேறி வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டருக்கிறோம், அப்படியிருக்க நம்முடையதாய் மொழியில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வேதாகமத்தைப் படித்து புரிந்து கொள்ள முடியவில்லை என்பது நம்பத் தகுந்த சமாதானமல்ல. எந்த ஒரு மனிதனோ மனுஷியோ எனக்கு கல்வியறிவு இல்லை. என்னுடைய ஆஸ்தி சொத்துக்களையும் நீங்களே வைத்துக் கொண்டு எனக்கு மரண பரியந்தம் உணவும் உடையும் கொடுத்துவிடுங்கள், அது போதும் என்று ஒப்படைத்து விட்டதாக நான் கேள்விப்பட்டதேயில்லை. ஆனால் ஆன்மீக விஷயத்தில் மனிதர்கள் வெகு தாராளம் எல்லாம் நீங்களே செய்துவிடுங்கள் பாட்டு, ஜெபம்' பிரசங்கம் அனைத்தும் போதகர் செய்தால் சரி. ஆன்மீக காரியங்களுக்கு நாம் கொடுக்கிற முக்கியத்துவம் அவ்வளவுதான். வாழ்க நமது ஆன்மீக தாகம்

எந்தத் தொழிலைக்கற்றுக் கொள்வதற்கும், எந்தப் படிப்பை மேற் கொள்வதற்கும் முயற்சியும் பயிற்சியும் வேண்டும். அதேபோல் வேதாகமத்தைக் கற்றுக் கொள்வதற்கும்: கூட முயற்சியும் பயிற்சியும தேவை. அவ்விதமான முயற்சிகள் ஒன்றையும் மேற்கொள்ளாமல் எப்படி ஒன்றைக் கற்றுக் கொள்ள முடியும்? இன்னும் சிலர் எங்களுக்குப் போதிய நேரம் இல்லை என்பர். இதுவும் ஒரு விதண்டாவாத சாக்குப் போக்குத் தான். ஆண்டவரே நாம் உம்மைத் தொழுகிறேன். உம்முடைய வேதத்தைப் படிக்கிறேன். எல்லோருக்கும் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் என்றால் எனக்கு ஒரு மணி நேரம் சேர்த்துப் 25 மணி நேரமாகக் கொடும். உமக்குத் தான் எல்லாம் முடியுமே என்பது

போல் உள்ளது. நமக்குக் கொடுக்கப்-பட்டிருக்கும். வாய்ப்பு வசதிகளுக்கேற்ப வேதாகமதியானத்துக்காக என்று ஒரு நேரத்தை ஒதுக்கி கொள்ள வேண்டுமேயல்லாமல் நேரமில்லை என்று பிதற்றுவது, ஆண்டவரே, உம்மைத் தொழுவதும் உமது வேதத்தைப் படிப்பதும் எனக்கு வேண்டாத வேலை என்னுடைய முக்கியக் அலுவல்களை அனைத்தையும் செய்துவிட்டு சாவகாசமாக உம்மிடம் வருவேன். வராவிட்டாலும் அதைப் பெரிதாக எடுத்துக் கொண்டு வருத்தப்படாதீர்'' என்று சொல்லாமல் சொல்கிறோம். ''முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று ஆண்டவர் கூறியதற்கு எதிர்த்திசைச் சிந்தனையோட்டம். இது நியாயமா?

நண்பர்களே 'மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்' என்று (மத். 9.4.);(உபா. 8.3) சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்று பவலடியாரும் (1 தீமோ. 4, 8) கூறுவதின் கருத்தைச் சிந்தித்துப் பார்க்கும்போது வேதாகமத்தின் மூலம் தேவன் நமக்குத் தந்திருக்கிற ஆலோசனைகள் எவ்வளவு மேன்மையானது என்று புரியும்.

ஆகவே பரிசுத்த வேதாகமத்தை நாள்தோறும் படித்து தியானித்து அவைகளின்படி நடப்பது எவ்வளவு முக்கியம் என்பதை எண்ணிப்பாருங்கள். சங்கீதக் காரன் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தை தியானிக்கிற மனுஷன் பாக்கியவான் அவன் நீர்க்கால்களின ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் என்கிறார். (சங். 1: 2, 3) ஆகவே, வேதாகம வாசிப்பை அலட்சியம் செய்யாதீர்கள்.

வேதாகமத்தைக் கற்றுக் கொள்ள முற்படுவர்களுக்கு சில முட்டுக் கட்டைகள் இருக்கின்றன. என்பது உண்மை, அதனால் ஆர்வம் குன்றிப் போகிறதா என்று தெரியவில்லை அவைகளில் சில.

**வேதாகமத்தின் தமிழ் நடை:** பரிசுத்த வேதாகமம் தமிழ் மறுமலர்ச்சிக்கு முந்தி மொழியாக்கம் செய்யப்பட்டது. அதில் கணிசமான வடமொழிக் கலப்பு இருக்கிறது. அதனால் தற்போதைய இளைய சமுதாயம் வேதாகமத்தின் தமிழ்நடையைக் காரணம் காட்டிப் படிக்க ஆர்வமற்றவர்களாயிருக்கிறார்கள். வயதானவர்-

கள் வேதாகமத்தின் பொடி எழுத்துக்களைக் காரணம் காட்டி தப்பித்துக் கொள்ள முயலுகின்றனர்.

இன்னும் அநேகருடைய ஆர்வமின்மைக்குக் கீழ்க்கண்டவை கள் கூடக் காரணமாயிருக்கலாம்.

1. வேதாகமம் ஒரே நூல் அல்ல. அது பல நூல்கள் அடங்கிய ஓர் நூல் நிலையம். என்ற உண்மை தெரியாமை.
2. வேதாகமத்தின் மையக் கருத்து பற்றிய தெளிவின்மை.
3. வரலாறு, புவியியல் பின்னணி தெரியாமை.
4. பகுத்துப் படிக்கும் முறை தெரியாமை
5. வேதாகமம் நம்பத் தகுந்ததுதானா என்ற சந்தேகம்.

ஆதாம் காலத்து பேசுகிற பாம்பு, நோவா காலத்து ஜலப் பிரளயம் மோசே காலத்து செங்கடல் பிளவு, யோனா காலத்து மனிதனை உயிரோடு விழுங்கி பின்னர் கக்கிப் போட்ட மீன் இவைகள் எல்லாம் வரலாற்று உண்மைகளா என்பதைவிட இதிகாசம் புராணங்களில் வரும் கற்பனைக் கதைகள் போன்றே உள்ளது என்று நினைப்போரும் உளர், இன்னும் சிலர் இயற்கையைப் பார்த்ததால கடவுள் இருக்கிறார் என்று தெரிந்து கொள்ளலாமே. பின்னே ஏன் வேதாகமத்தைப் படிக்க வேண்டும் என்று கூட சிலர் நினைக்கின்றனர். இயற்கை தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்துவது உண்மைதான் (சங்19:1) ஆனால் இயற்கை தேவன் எப்படிப்பட்டவர் என்றும் அவருக்கும் மனுக்குலத்துக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது என்றும் மனிதன் என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக் கூடாது என்றும் சொல்வதில்லையே, ஆகவே அவர் நமக்குத் தந்தருளியிருக்கிற வேதாகமத்தை வாசிக்க வேண்டும். வேதாகமத்தைப் படிப்பதினால் ஏற்படும் நன்மைகள்

1. ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது
2. பேதையை ஞானியாக்குகிறது
3. தெளிவு உண்டாக்குகிறது
4. எச்சரித்தும் புத்தி சொல்லுகிறது. என்று தாவீது தமது சங்கீதப் புத்தகத்தில் கூறியிருக்கிறார், சங். (19:7-11) அப்படிப்பட்ட தேவ இரகசியங்கள் அடங்கிய ஞானப் பெட்டகத்தைப் புறக்கணியாமல் நாள்தோறும் தனிமையாகவும் குடும்பமாகவும் வாசித்து அதன் வழியில் நடந்து ஆசீர்வாதம் பெறுவோம்.

இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக் கொள்ளுகிறவர்களும், பாக்கியவான்கள்'' என்பது எவ்வளவு உண்மை என்பதை ருசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன் (வெளி. 1:3)

E.Z. செல்வ நாயகம்

# கட்டளைகளும் முன் உதாரணங்களும்

வேதாகமம் முழுவதும் தேவனுடைய கட்டளைகள் பரவலாகக் காணப்படுகின்றன. அவைகளில் சில, மனிதர்கள் எதைச் செய்வது நல்லது என்று அறிவுறுத்துவதற்காகவும், சிலவைகள் மனிதர்களை எதைச் செய்யக் கூடாது என்று எச்சரிப்பதற்காகவும் கொடுக்கப்பட்டவைகள். அண்ட சராசரங்களையும் படைத்துப் பராமரித்து வருகிற தேவனுக்கு அப்படிப் பட்ட ஆலோசனைகளையும், எச்சரிப்புகளையும் கொடுப்பதற்குரிய தகுதியும் அதிகாரமும் உண்டு என்றும், மனிதன் அவருடைய ஆசீர்வாதத்தையும் அனுக்கிரகத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அதே போல கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்ட மக்களைப் பற்றியும் சொல்லியிருக்கிறது. ஒரு கட்டத்தில் மனிதன் தேவனுவடைய ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தும் காரியத்தைப் பற்றியும் வேறொரு இடத்தில் அந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவரது ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டவர்களின் வரலாற்றையும் நாம் வாசிக்கிறோம். தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்குக் கிடைத்த பலாபலன்களை வாசிக்கும் போது நாமும் கர்த்தருடைய கட்டளைகளை மதித்துக் கீழ்ப்படிய வேண்டும் என்ற ஆவல் உண்டாகிறது.

ஆகவே வேதாகமத்தின் பக்கங்களைப் புரட்டி அவைகளை எவ்வாறு நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்று பார்ப்போம். உதாரணமாக 'பெரிய கட்டளை' என்று வர்ணிக்கப்படும் கட்டளைகளில் அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தை உலகம் எங்கும் பிரகடனப்படுத்த வேண்டும் என்று கட்டளை பெற்றிருந்தார்கள். அதற்கு **''விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். விசுவாசியாதவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள்''** என்ற நிபந்தனையும் கொடுக்கப்பட்டுள்ளது. [மாற்கு 16:16] பின்னர் அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் பெந்தே கோஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் எருசேலேமில் கூடி வந்திருந்த பொழுது பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெற்று சகல சத்தியத்துக்குள்ளும் வழி நடத்தப்பட்டார்கள், பல்வேறு நாடுகளில் இருந்து வந்திருந்த பக்தியுள்ள யூதர்கள் திரளாய்க் கூடியிருந்தார்கள். அவர்களுக்கு

முதல் முறையாக அப்போஸ்தலர்கள் சுவிசேஷப் பிரகடனம் செய்தார்கள். அதாவது அவர்கள் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றியும், அற்புத அடையாளங்கள், மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் பரமேறிப் போனது ஆகியவைகளைப் பற்றியும் பிரசங்கித்தார்கள். அவரவர் தாய்மொழியில் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்ட அந்த மக்களில் பலர் இயேசுகிறிஸ்து தேவகுமாரன் என்னும் உண்மையை உணர்ந்து பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, ''சகோதரர்களே நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார்கள். அதற்குப் பேதுரு, ''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கு என்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள்'' என்றார் (அப் 2: 37,38) இன்னும் சற்று மேலே தள்ளி வாசித்தால் ''அவனுடைய வார்த்தைகளை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்''. (அப் 2:4) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சுவிசேஷத்துக்குக் கீழ்படியச் சொல்லும் இந்தக் கட்டளைக்குத் துணையாக அப்போஸ்தலர் நடவடிக்கைப் புத்தகத்தில் இன்னும் பத்து சம்பவங்கள் உண்டு. அவைகளில் மிகத் தெளிவானதும் சுலபத்தில் புரிந்து கொள்ளக் கூடிய நிகழ்ச்சி அப் 8ம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கின்றது. அதில் பிலிப்பு என்னும் சுவிசேஷகன் ஏவப்பட்டு, பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த எத்தியோப்பிய நாட்டு நிதி மந்திரியைச் சந்தித்து இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்கிறார். சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தை உணர்ந்த மந்திரி, ஓர் நீர் நிலையண்டை வந்த போது தான் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று முழு மனதோடு விசுவாசித்தால் தடையில்லை என்கிறார். சுவிசேஷகன் பிலிப்பு அதற்கு அவன் ''நான் அப்படியே விசுவாசிக்கிறேன் என்று கூறி இரதத்தை நிறுத்தும்படி கட்டளை கொடுத்தார் பின்னர் திருமுழுக்குப் பெற்று இருவரும் தண்ணீரிலிருந்து வெளியே வந்தனர். மந்திரி மகிழ்ச்சியுடன் தன் பயணத்தைத் தொடர்ந்தார் பிலிப்பு தன் பணியை முடித்த திருப்தியுடன் தன் வழியே சென்றார்.

அப்போஸ்தலர் நடபடிகளில் சொல்லப்பட்டிருக்கிற எல்லா சம்பவங்களிலும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. மக்கள் கேட்டனர், கேட்டவர்கள் விசுவாசித்தனர், பாவத்தை விட்டு

மனந்திரும்பினர். இயேசுவே தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டனர். பாவமன்னிப்புக்காக தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். என்ற விஷயங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன.

சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற கட்டளை இன்று நமக்கும் இருப்பதால் நாமும் கூட அவர்களுடைய முன் உதாரணத்தைப் பின்பற்றி அவர்களைப் போலவே நாமும் செய்து பாவமன்னிப்புப் பெற்று அவர்கள் எந்த சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்களோ அந்தச் சபையில் நாமும் சேர்க்கப்பட வேண்டும் அவரே நம்மை இரட்சிறவரும் அவருடைய சபையிலே சேர்த்துக் கொள்பவரும் ஆவார் (அப் 2:47) இதுதான் ஒருவன் கிறிஸ்துவனாகவதற்கு வேதாகமம் கூறுகிற வழி. அப்படியிருக்கும் பொழுது வேறே முறைகளைக் கையாண்டு இரட்சிப்பு பெற்றுக் கொள்வது எங்ஙனம் சாத்தியமாகும்? இரட்சிப்படைந்து பரலோகம் போக வேண்டும் என்றுமெய்யாகவே விரும்பும் ஒருவர் ஆண்டவருடைய கட்டளையையும் அதற்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டவர்களின் முன் மாதிரியையும் புறக்கணிப்பது எப்படி ?

அடுத்து, இன்னொரு கட்டளையில் கர்த்தருடைய பிள்ளைகள் வாரத்தின் முதல் நாளில் கூடி கர்த்தரை ஆராதிக்கவும் அவருடைய பந்தியில் பங்கு கொள்ளவும் வேண்டும் என்று கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. 1 கொரி 16:2ல் பவுல் அப்போஸ்தலன் கர்த்தருக்குக் கொடுக்கும் தர்மபணத்தை வாரத்தின் முதல் நாளில் தர வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார் (அப் 20:7) கர்த்தருடைய பிள்ளைகள் வாரத்தின் முதல் நாளில் ஆராதிக்கக் கூடி வந்திருந்தார்கள் என்று வாசிக்கிறோம். **''வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தார்''** என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே அப்பம் பிட்குதல் என்று குறிப்பிட்டிருப்பது கர்த்தருடைய இராப்போஜனத்தையே (மத் 26:26-28) 'அப்பம் பிட்குதல்' தான் சபை கூடி வருதலின் தலையாயநோக்கம் என்பதைச் சுட்டுவதற்குத் தான் அப்பம் பிட்கும்படி கூடி வந்தார்கள் என்று சொல்லுகிறது. வேதாகமத்தின்படி ஆரதனையின் இதர அம்சங்களாகிய ஜெபம் (அப் 2 : 42) கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தல் கர்த்தரை துதித்துப்பாடுதல் (எபே 5;29) கர்த்தருக்கு கொடுத்தல் (1 கொரி 16:2) ஆகியவைகளும் அனுஷ்டிக்கப்பட்டிருக்கும் என்பதைச் சொல்ல தேவையில்லை. இங்கே நாம் ஒரு முன் உதாரணத்தை காண்கிறோம். அதாவது

சீஷர்கள் முதல் நாள் அன்று அப்பம் பிட்கவும் இன்னும் வேதாகமம் கூறுகிறபடி கர்த்தரை ஆராதிக்கவும் கூடி வந்தார்கள். இன்றைக்கு கிறிஸ்தவ ஆராதனைகள எவ்வாறு அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பதற்கு மேற்சொன்ன காரியங்கள் ஒரு தெளிவான முன் உதாரணம். ஆனால் அப்பம் பிட்குதல் வாரம் தோறும் அனுஷ்டிக்க தேவையில்லை. என்று கிறிஸ்தவர்கள் பலர் அலட்சிபடுத்துகின்றனர் பரிசுத்த ஆவியானவர் மூலமாக இயேசு கிறிஸ்து கட்டளையிட்டதை மாற்றுவதற்கு மனிதன் எம்மாத்திரம்?

இப்படி கர்த்தருடைய கட்டளைகளையும் அந்தக் கட்டளைகள் எவ்வாறு பயபக்தியுடன் கைக்கொள்ளப்பட்டது என்பதையும் ஏராளமாக சொல்லிக் கொண்டே போகலாம். இப்படிபட்ட கர்த்தருடைய கட்டளைகளையும் அவைகளை பயபக்தியுடன் கடைபிடித்த ஆதிக் கிறிஸ்தவ பக்தர்களுக்கு ஏற்பட்ட ஆசிர்வாதங்களையும் நன்மைகளையும் கவனித்துப் பார்க்கும்போது அவைகளை நாமும் பின்பற்றினால் நமக்கும் அந்த ஆசிர்வாதமும் நன்மையும் கிடைக்கும் என்ற தெம்பும் உற்சாகமும் உண்டாகிறது. ஆகவே நாமும் அதன்படி செய்து பலனடைவோம். கூட்டவும் குறைக்கவும் நமக்கு அதிகாரமில்லையே (வெளி 22 : 18,19) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கல்லவா சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. *(மத் 28 : 18)*

J. C. சோட்

## அன்பின் மாட்சி

அன்பு பொறுமையுள்ளது
அன்பு பரிவுள்ளது
அன்பு உண்மையைக் கண்டு உளம் மகிழும்
அன்பு அனைத்தையும் தாங்கிக் கொள்ளும்
அன்பு அழுக்காறு கொள்ளாது
அன்பு பெருமை பேசாது
அன்பு இறுமாப்பு அடையாது
அன்பு இழிவானதைச் செய்யாது
அன்பு தன்னலத்தை நாடாது
அன்பு சீற்றத்துக்கு இடந்தராது
அன்பு வர்மம் வைக்காது
அன்பு அநியாயத்தைக் கண்டு மகிழ்வுறாது
அன்புக்கு என்றும் முடிவிராது

**பெண்கள் பகுதி**

# மனமுறிவை மனதிலும் நினைக்கவேண்டாம்

பொதுவாகவே சினிமா, தொலைக்காட்சி போன்றவைகள் தேவனுடைய திட்டத்தைச் சீர்குலைக்க முயற்சிக்கும் சாத்தானின் வல்லமையான ஏவுகணைகள். அதிலும் மேலை நாட்டு சினிமாக்களும் தொலைக்காட்சிகளும் இந்த நாசவேலையில் முன்னனியில் நிற்கின்றன. தேவனால் வரையறுக்கப்பட்ட திருமணத்தின் சீரிய நோக்கங்களை உடைத்து உருக்குலைத்து, ''கண்டதும் காதல்'', ஒத்துப்போகிற வரைக்கும் இல்லற வாழ்க்கை, முடியாவிட்டால் இருக்கவே இருக்கிறது ''விவாகரத்து'' என்ற இழிநிலைக்கு இளம் வட்டங்களை உசுப்பிவிட்டுத் தாறுமாறான இல்லற சுகங்களை ஊக்குவிக்கின்றன. சட்டதிட்டங்களுக்குக் கட்டுபட்டு வாழ்வது கோழைத்தனம் என்ற எண்ணம் விஷவாய்வு பரவுவதுபோல் பரவி இளைஞர்களின் உள்ளங்களை பாழ்படுத்தி வருகிறது. திருமணம் சம்பந்தப்பட்ட சமூகக் கட்டுப்பாடுகள், தேவ ஆலோசனைகளை மீறிப் போர்க் கொடி உயர்ததும் இளசுகளை வாலிப உலகம் வாழ்த்தி வணங்குகின்றன.

ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள் தம்முடைய வாழ்க்கையில் முக்கியமான நிகழ்ச்சி என்று கருதப்படும் இப்புனிதமான திருமணம் போன்ற காரியங்களில் தேவனுடைய ஆலோசனை என்ன என்று தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். ''..ஆதியிலே மனுஷனை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாமிசமாயிருப்பார்கள். இப்படியிருக்கிறபடியினால் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாமிசமாயிருப்பார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்'' என்று திருமணத்தின் உயர்ந்த நோக்கத்தை விவரிக்கிறார். (மத். 19:4,-6) மனித வாழ்க்கையின் எல்லா அம்சங்களுக்கும் தேவ ஆலோசனையே மிகச் சிறந்தது. ஆகையால் திருமணத்தை ஒருவரும் அற்பமாக எண்ணி யோசனையின்றிச் செய்யாமல் கருத்தோடும் ஜெபத்தோடும் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். அதற்கப்புறம் திருமணத்தில் இணைக்கப்பட்ட ஒரு ஆணும் பெண்ணும் தங்கள் பெற்றோர்களிடமிருந்து பிரிந்து இருவரும் சிந்தனையிலும், செயலிலும், ஒருமனப்படுவதற்கு முயலவேண்டும். ஏனெனில் அவர்கள் ஓரே மாம்சமாயிருக்கிறார்கள்.

''ஒவ்வொருவனும் தன் தன் சுயபிரயோஜனத்தைத் தேடா மல், பிறருடைய பிரயோஜனத்தைத் தேடக் கடவன்'' (கொரி. 18:24) என்று கூறப்பட்டிருப்பதின் பொருளை உணர்ந்து கணவன் மனைவிக்குள் ஏற்படும் சிறு சிறு மனஸ்தாபங்களைப் பொருட்படுத்தாமல் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்ல பழகிக் கொள்ள வேண்டும்.

ஆனால் நடைமுறையில் நாம் பார்ப்பது என்ன? எந்த ஒரு தேவனுடைய திட்டத்தையும் மக்கள் அப்படியே ஏற்றுக்கொள்வது கிடையாது. தாயையும், தகப்பனையும் விட்டு மனைவியோடு இசைந்திருக்கக்கடவன் என்று தேவ ஆலோசனை தெளிவாக இருந்தும் சில ஆடவர்கள் பெற்றோர்களுடைய நிழலிலேயே தாபரிக்க விரும்புகிறார்கள். வேறு சிலர் தனியாகப் போய் நாம் சமாளிக்க முடியாது என்று பயந்துகொண்டு தாயாரின் முந்தானையைப் பிடித்துக் கொண்டே நடக்க விரும்புகிறார்கள். இந்தக் கூட்டுக் குடும்ப முறை சில குடும்பங்களில் வெற்றி நடைபோடும். பல குடும்பங்களுக்குச் சரிபட்டு வருவதில்லை. ஆரம்பத்தில் லேசாகப் புகைந்து, மோதல் ஏற்பட்டு பிரச்னைகள் முற்றி சண்டையிலும் சச்சரவுகளிலும் போய் நிற்கும். பரஸ்பரம் ஒருவர் மேல் ஒருவர் குற்றச்சாட்டுகள் தொடரும். இப்படிப்பட்ட கட்டங்களில் பெரும்பாலும் பாதிக்கப்படுவது புதிதாய்க் குடும்பத்தில் வந்த மருமகள் தான். சம்பந்தப்பட்ட அனைவரும் தாங்கள் இந்த விவகாரங்களில் என்ன செய்திருக்க வேண்டும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவேளை தேவனுடைய ஆலோசனையை நாம் புறக்கணித்து விட்டதால் ஏற்பட்ட கோளாறு என்றெல்லாம் சிந்திக்காமல் சோதனைகள் வந்து வேதனைகள் பெருகும் போது மனம் வெறுத்து தான் தேவனுக்கும் மனிதர்களுக்கும் முன்பாக கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிட்டு ''போதும் திருமண வாழ்க்கையின் சுகம்'' என்று விரக்தியடைந்து விவாகரத்து பற்றிய சிந்தனையில் மூழ்குவது கிறிஸ்தவப் பிள்ளைகளுகு ஏற்றதல்ல.

இரண்டு வெவ்வேறு சூழ்நிலைகளில் வளர்ந்த ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒரே மாம்சமாக இணைந்து போவது கடினம். கொஞ்சம் நாள் பிடிக்கும் என்று தேவனும் அறிவார். இருப்பினும் வேசித்தன முகாந்தரம் தவிர மற்ற எந்தக் காரணத்திற்காகவும் மன முறிவு பற்றி சிந்திக்கக் கூடாது என்று ஆலோசனை கூறியிருக்கிறார். (மத். 19:3-9) மணமுறிவினால் தேவன் ஏற்படுத்திய முதல் அமைப்பாகிய குடும்பத்துக்கு ஏற்படும் இழப்புகளையும்,

துன்பங்களையும், சற்றே எண்ணிப்பாருங்கள், முதல் இணைப்பி னால் பிறந்தகுழந்தைகளின் நலம் பாதிக்கப்படும், பெண்மைக்கும் பெருமை தரும் கற்பு நெறி காயலான் கடைச் சரக்காகிவிடும். ஒழுக்க நெறி சிதையும்; குற்றங்கள் பெருகும். பாலியல் நோய்கள் பற்றும். இப்படி எத்தனையோ பிரச்சனைகள் உருவாகும்.

சொல்லப் போனால் குடும்பத்திற்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகளுக்கு திருமணமுறிவு ஒரு தீர்வே அல்ல, மாறாக அது அதிகமான பிரச்சனைகளை உருவாக்கும் என்றால் மிகையாகாது. விவகாரத்து சமுதாயம் என்ற மாளிகையின் அஸ்திபாரமாகிய குடும்பம் என்னும், கட்டுக்கோப்பைக் குலைத்துப் போடுவதின் மூலம் அதன் மேல் கட்டப்பட்டுள்ள சமுதாய அமைப்புக்கு பெரும் தீமைகளை விளைவிக்கும், ஆகையால் வாழ்க்கையில் பிரச்சனை கள் வரும்போது அவைகளை ஞானமாகச் சமாளிப்பதற்கு முற்பட வேண்டுமேயல்லாமல் மணமுறிவு என்பதை மனதிலும் நினைக்கக் கூடாது. அதைவிட கொஞ்சம் விட்டுக் கொடுத்து வாழ்ந்து சம் பந்தப்பட்டவர்களுடைய அன்பைப் பெற முயற்சிக்கலாமே

கணவன்மார்கள் முரடர்களாகவும், மனைவி மக்களின் நலனில் அக்கறையில்லாதவர்களாகவும், தன் நலமுள்ளவர்களாகவும், நடந்து கொள்பவராகக் கூட இருக்கலாம். அதற்குச் சவால் விடுகிற பாணியில் மனைவிமார்களும் நடந்து கொண்டால் குடும்பம் சிதை யும். நஷ்டம் பெரும்பாலும் பலவீனமான பாத்திரமாகிய தாய்க் குலத்துக்கே. கத்தி சுரைக்காய் மேல் விழுந்தாலும், சுரைக்காய் கத்தி மேல் விழுந்தாலும் பாதிக்கப்படுவது சுரைக்காய் தானே. அதையெல்லாம் சிந்தித்துப் பார்த்துக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ''உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை சபிப்பவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங் கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத் துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்'' என்று கற்பித்திருக் கிறபடி செய்து பார்க்க முயலலாமே. (மத் 5:44) உங்கள் பொறு மையும் சகிப்புத் தன்மையும், உங்கள் ஜெபமும் என்றாவது ஒரு நாள் அவர் உள்ளத்தை உடைத்து உங்கள் மேல் அன்பு செலுத்த வழிகோலுமே. முயன்று பாருங்கள்.

இந்த பிரச்சனைகள் தவிர்க்கப்படுவதற்கு வருமுன் காத்தல் என்ற தடுப்பு முறையைக் கையாள்வது இன்னும் சிறந்தது. திரு மணத்துக்குமுந்தியேசம்பந்தப்படவிருக்கிற குடும்பம்,பையன்அல்லது பெண் ஆகியோருடைய பண்புகள் குடும்ப சூழ்நிலைகள் ஆகிய வைகளைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள முற்படுவது பயன்தரும் அந்நிய நுகத்தில் விசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்க

ளாக என்று தேவ ஆலோசனையை ஏற்றுக் கொண்டு (2 கொரி 6.14) அவர்களுடைய விசுவாச நிலையைக் கூடத் தெரிந்து கொண்டு திருமண ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

இப்படிப்பட்ட காரியங்களில் கொஞ்சம் காலதாமதம் கூட ஆகலாம். ஆனால் மனிதன் தனிமையாய் இருப்பது நல்லது அல்ல என்று ஆதாமுக்கு ஒரு துணையை ஏற்படுத்தியவர் ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணையும் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணையும் உண்டாக்கியே இருப்பார் என்று நம்பிக்கையோடு பொறுமையாயிருந்தால் கர்த்தர் ஏற்ற காலத்தில் வாய்க்கச் செய்வார்.

**பெட்டி பர்ட்டன்சோட்**

---

**மாயம் வேண்டாம் : மனந்திரும்பு**

**நீங்கள் என் சந்நிதியில் வரும்போது, என் பிரகாரங்களை இப்படி மிதிக்க வேண்டுமென்று உங்களிடத்தில் கேட்டது யார்?**

**இனி வீண் காணிக்கைகளைக் கொண்டுவர வேண்டாம். தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாய் இருக்கிறது; நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப் பிறப்பையும், ஓய்வு நாளையும், சபைக் கூட்டத்தையும் நான் இனிச் சகிக்க மாட்டேன்.**

**உங்கள் மாதப் பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது; அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது; அவைகளை சுமந்து இளைத்துப் போனேன்.**

**நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது.**

**உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றி விட்டு தீமை செய்தலை விட்டு ஓயுங்கள்.**

**நன்மை செய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள் ஒடுக்கப்பட்டவைகளை ஆதரித்து, திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்.**

**(ஏசாயா 1:12-17)**

# விரைந்து வரும் நியாயத் தீர்ப்பு நாள்

ஒரு அதிகாலைப் பொழுதிலே, எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, காவல்துறை அதிகாரி ஒருவர் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி உங்களை எழுப்பி, உங்கள் பேரில் குற்றங்கள் பல சுமத்தி நீதிமன்றத்திலே கொண்டு போய் உங்களை நிறுத்துகிறார். உங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் சந்தர்ப்பம் எதுவும் தரப் படவில்லை; நீங்கள் அறையிலே செய்த இரகசிய குற்றங்கள் அனைத்தும் நீதிபதியின் முன்னே அம்பலமாகின்றன; உங்கள் எதிர்காலமே அழிந்து போகும் ஆயுள்தண்டனை அளிக்கப்படுகிறது இப்படிப்பட்ட ஒரு சீர்கேடான அவலநிலை பற்றி சிறிது சிந்தித்துப் பாருங்கள். கற்பனை தான் என்றாலும் உங்கள் கண்கள் கலங்க வில்லையா?

என் அருமை நண்பனே, அந்த கடைசி நாளிலே தேவனுடைய நாளிலே தேவனுடைய நியாயசானத்திற்கு முன்பு நிறுத்தப்படும் போதும், மேற்கண்ட நிலையில் நீ நிற்கக் கூடும்! தேவனுடைய வருகை அல்லது உனது மரணம் இவ்வுலகிலிருந்து உன்னைப் பிரித்த பின்னர், அவருடைய நியாயத் தீர்ப்பு நாள் வருகிறது! **அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிககப்பட்டிருக்கிற படியே** நடக்கவிருக்கிறது. (எபி 9:27) உன்னைத் தயார்படுத்திக்கொள்ள அவகாசம் எதுவும் அளிக்கப்படுவதில்லை! மரணத்தை தொடர்ந்து நியாயத் தீர்ப்பு என்பதே அவரின் நியதி. இவ்வுலகில் மனிதன் கொஞ்ச காலம் வாழ்ந்த பின் மரணமடைந்து, பின் நியாயத்தீர்ப்பை சந்திக்க வேண்டியவனாக இருக்கிறான்!

**நியாயத் தீர்ப்பு நாளை நம்பாதவர்கள் சிலர் உண்டு தேவசித்தத்திற்கு ஏற்புடைய வகையில் சீரான** வாழ்க்கை வாழாமல் நியாயத் தீர்ப்பு நாள் ஒன்று உண்டு என்பதையே நம்ப மறுக்கும் சிலர் உண்டு; தங்கள் பாவங்களின் பலனை சந்திக்க விருப்பமற்று அவர்கள் தேவனுடைய போதனைகளை வேண்டு-மென்றே புறக்கணிக்கிறார்கள். அதைக் குறித்து பேதுரு கூறும் போது, **முதலாவது நீங்கள் அறிய வேண்டியது என்ன வெனில்; கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து தங்கள் சுய இச்சைகளின் படியே நடந்து அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்ற முதல் இருந்த விதமாய் இருக்கிறதே என்று**

சொல்லுவார்கள்'' என்கிறார். (11பேதுரு3;4) மனிதனுக்குமேற் பட்டசக்திஎதுவுமில்லை எனசாதிக்கும் நாஸ்திகர்கள் கூட, இயற்கை யின்சீரான செயல்பாடுகளைக் கவனிப்பதால். இவ்வுலகம் அழிவதற் கான ஆதாரம் எதுவுமில்லை என்ற முடிவில் இறுமாந்து வாழ்கின்றனர். அதிகாலை உதயமாகி மாலையில் மறையும் ஆதவன் பருவகாலங்களின் ஒழுங்கான மாற்றங்கள், விதைக்கவும் அறுவடை செய்யவும் குறிப்பிட்ட காலங்கள் ஒரு ஒழுங்கின் அடிப்படையில் சீராக சஞ்சரிக்கும் வானமண்டலத்துக் கோளங்கள், அதனதன் ஜாதிக்கேற்றவைகளைப் பிறப்பிக்கும் மிருக, பறவை இனங்கள் இத்தியாதி காரியங்கள் அனைத்தையும் காணும் மனிதன் உலகத்திற்கு அழிவு இல்லை' என்று முடிவு கட்டி விடுகிறான். ஆனாலும், இவ்வுலகைப் படைத்த தேவன், தாம் சொன்னபடியே அவர் நியமித்த நாளில் இவ்வுலகை அழிக்கத்தான் போகிறார்!

## நியாயத் தீர்ப்பு நாள் தவிர்க்க முடியாதது

நியாயத் தீர்ப்பு நாளைப்பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் இயேசு அடிக்கடி போதித்து வந்தார். அவருக்கு செவிமடுக்க மறுத்தவர்களைக் கண்டித்தார்'' ''நியாத்தீர்ப்பு நாளிலே உனக்கு நேரிடுவதைப் பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகு வாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (மத் 11 :24). மீண்டுமாக அத்தீர்ப்பு பற்றிக் குறிப்பிடுகையில், ''மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார். (மத். 12:36). அப்போஸ் தலர் பேதுருவும் அந்நாளைப் பற்றிக் கூறியிருக்கிறார். ''கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக் கிரமக்காரரை ஆக்கினைக் குள்ளானவர்களாக நியாயத் தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்'' (2பேதுரு 2:9). பூமியிலே வாழ்ந்த, வாழுகின்ற சகல மக்களையும் தேவன் நியாயத் தீர்ப்பு நாளிலே தன் முன் கொண்டு வந்து நிறுத்தி, நீதி வழங்குவார்!

நியாத்தீர்ப்பு நாள் தேவனுடைய நாள் என பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில், அந்த நியாயசனத்திலே அவர் அமரும் போது அவருடைய வெற்றி முழுமையடைகிறது. அழிந்து போகும் மனித உடலிலிருந்து பரிசுத்தவான்கள் விடுபட்டுப் போவதாக பவுல் கூறுகிறார் : ''.. அப்படிப்பட்டவருடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி..'' (1கொரி 5:5) வேறு ஒரு இடத்தில் அவர் கூறுகிறார் : ''இரவிலே திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்'' (1தெச, 5:2) இதே

காரியத்தைப் பற்றி யோவான் கூறும் போது, ''நியாயத் தீர்ப்பு நாளிலே நமக்கு தைரியம் உண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது''. என்றார் (1யோவான் 4:17). அந்நாளைப்பற்றி இயேசு குறிப்பிடுகையில், ''இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப் படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்' அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும் படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்'' என்றார், (யோவான் 5:28, 29,). தங்களுடைய நித்தியத் தீர்ப்பை அறிய, அந்த நாளிலே நல்லவர்களும் கெட்டவர்களும் ஒன்றாகக் கூடுவார்கள்.

### எதிர்பாராமல் வரும் அந்நாள்!

''இரவிலே திருடன் வருகிற விதமாய் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாக அறிந்திருக்கிறீர்கள்'' என அப். பவுல் கூறும் போது, பரிசுத்தவான்களுக்கு இந்த உண்மை தெரியும் என்கிறார். (1 தெச 5:2). இயேசு கிறிஸ்து தனது சீடர்களை எச்சரிப்பதைக் கவனியுங்கள்: ''உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்'' ''நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்'' (மத். 24:-42, 44). தன் வருகைபற்றி எந்த திருடனும் முன்னறிவிப்பு செய்வதில்லை. கர்த்தரும் தனது வருகையைப்பற்றிய அறிவிப்பு எதுவும் தருவதில்லை. தந்தால் அந்த நாளிலும் நாழிகையில் மட்டும் நீதியும் நியாயத்தையும் கடைபிடித்தால் போதும் என்று மெத்தனமாக இருந்து விடுவார்கள்

தங்களுடைய விசேட வரங்களின் மகிமையால் கர்த்தரின் வருகைக்கான தேதி எனக்குத் தெரியும் என்று கூறி மக்களிடையே பரபரப்பூட்டும் போலி மதத்தலைவர்கள் பலரை இன்று காண முடிகிறது. அவர்கள் இதுவரை குறிப்பிட்ட பல தேதிகளில் மீண்டுமாக புதிய தேதிகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் கள்ளத்தீர்க்கதரிசிகள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். கர்த்தருடைய வசனங்களைக் கேளுங்கள். ''அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார். (மாற்கு 13:32). கள்ளப் போதகர்-களின் வாயை அடைக்க இந்த வசனம் ஒன்று போதாதா தேவ-குமாரனையும் தேவ தூதர்களையும் விட அதிக ஞானமுள்ளவர்களா இவர்கள்? இவர்கள் அறிந்தே பொய் பேசுகின்றார்; அல்லது

ஞானக் குருடர்களாக இருக்கின்றனர்! இக்காரியத்தை பற்றி நமது இரட்சகரிடம் அவருடைய சீடர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் ''பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல'' என பதிலளித்தார். [அப். 1:7]. அவருடைய வருகை திடீரென, ஒரு நொடிப் பொழுதில் இருக்கும். ''மின்னல் வானத்தில் ஒரு திசையில் தோன்றி மறுதிசை வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார்'' [லூக் 17:24]. எதிர்பாராத வேளையில் திடீரென அவர் வருவார்!

## கிறிஸ்து வழியாக தேவன் நியாயம் தீர்ப்பார்!

நியாயத் தீர்ப்பு பற்றி நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ன? ''மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்'' (அப். 17:30,31). நியாயாசனத்தில் அமர இயேசுவை தேவன் நியமித்தார். அப். பவுல் ''நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந் தீர்க்கப் போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்ன மாகுதலையும் அவருடைய இராஜ்ஜியத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறேன்'' என்று கூறினார். [2 தீமோ. 4:1]. ''உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத் தீர்ப்புச் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்'' என பரிசுத்த வான்களைப் பற்றி பேதுரு குறிப்பிடுகிறார். [1 பேதுரு 4:5]. நியாயாசனத்திலே இயேசு அமரும் வேளையில், ''சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்'' [மத். 25:32].

பேதுரு ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கிறார். ''நியாயத் தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?'' [1 பேதுரு 4:17-18]. பவுல் இக்கேள்விக்றப் பதிலளிக்கிறார். தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும் படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும்'

ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிபடும் போது அப்படியாகும். அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.'' [2 தெச. 1:7-10]. ஆம்! பரிசுத்தவான்கள் உட்பட சகல தேசத்தாரும் தேவனை சந்திக்க வேண்டும்! '' .... நாமெல்லோரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துக் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.'' [ரோமர் 14:10,12]. இவ்வுலகில் ஒவ்வொருவரும் தான் வாழ்ந்த வாழ்க்கையின் படியே நியாயந் தீர்க்கப்படுவர். ''ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்'' [2 கொரி. 5:10]

## இந்த நியாயத்தீர்ப்பு வெளிப்படுத்துவது என்ன?

மனிதர்களின் சகல இரகசியச் செயல்களும் நியாயத்தீர்ப்பிலே அம்பலமாகும்; தேவன் ''மறை பொருட்களை வெளிப்படுத்துகிறவராயிருக்கிறார் [தானியேல் 2:47]. நியாயத்தீர்ப்பின் காரியத்திலும் இது முற்றிலும் பொருந்தும், 'பாதாளமும் அழிவும் கர்த்தரின் பார்வைக்குப் பிரத்தியட்சமாயிருக்க, மனுபுத்திரருடைய இருதயம் அதிக பிரத்தியட்சமாயிருக்குமல்லவா ? (நீதி. 15 : 11) கண்டுபிடிக்க முடியாத இரகசியமோ, மறை பொருளோ இருக்காது ! ''வெளியாக்கப்படாத மறை பொருளுமில்லை ; அறியப்படாத இரகசியம் இல்லை'' (லூக் 12) அந்நாளின் நீதிபதியை ஏமாற்ற எவராலும் இயலாது ! ''அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை ; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.'' (எபி. 4: 13) புத்தகங்கள் திறக்கப்படும்; தேவனுடைய குறிப்புகள் யாவும் அதில் காணப்படும்.

## அந்த நியாயத் தீர்ப்பின் முடிவுகள் :

மனித ஜீவராசிகள் யாவருக்கும் இரண்டு விதத் தீர்ப்புகள் அளிக்கப்படும் ''வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே ' என்றும், ''சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்'' (மத் 25 : 34, 41) என்றும் இருவிதத் தீர்ப்புகள் உண்டு. ''அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை

அடையவும் போவார்கள் என்றார் "(வசனம் 46) மேற்சொன்ன இரட்சிக்கப்பட்டவர், வீழ்ந்து போனவர் என்ற இருதரப்பாருக்கும் வழங்கப்படும் இரண்டு தீர்ப்புகளுக்கும் இடையில் வேறே தீர்ப்பு எதுவும் கிடையாது.

இரட்சிக்கப்பட்டவர்களுக்கு உன்னதமான ஒரு இடம் உண்டு ஏனெனில், "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படித்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலி. 3 : 20, 21). ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய இந்த மகத்தான வெற்றியைப் பற்றிய வர்ணனை 1தெசலோனிக்கேயர் 4:13 முதல்18 வசனங்களில் காணப்படுகிறது. "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாய் இருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை ; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்." (1 யோவான் 3: 2) இந்த புதிய நிலை நம்மில் ஏற்படுத்தும் மாற்றம் என்ன ? "நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள், பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் "(கொலோ. 3: 1- 2). இயேசு மீண்டும் வருவேன் என்றும் தேவனுடைய வாசஸ்தலத்திற்கு நம்மை அழைத்துச் செல்லுவேன் என்றும் வாக்களித்திருக்கிறார். யோவான் 14 : 1- 3).

ஆனால், தேவனுக்கு கீழ்ப்படிய மறுக்கும் மக்களின் பரிதாபமான, பயங்கரமான முடிவு தான் என்னே! (2 தெச 1 : 1-9) நித்திய வாழ்வு மறுக்கப்பட்டு, எவ்விதமான நம்பிக்கையும் அற்ற நிலையில், நியாயத் தீர்ப்பு நாளில் கலங்கி நிற்கப் போகின்றனர். "அவர்களுடைய வாதையின் புகை சதா காலங்களிலும் எழும்பும்.. இரவும் பகலும் இளைப்பாறுதல் இராது." (வெளி 14 : 11) ஆம் நண்பரே ! வீழ்ந்து போவோரின் எண்ணிக்கை எண்ணிலடங்காததாக இருக்கப் போகிறது. அதில் நீங்களும் ஒருவராக இருக்கக் கூடும் !

நண்பரே, இதோ உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது இன்றே தேவனுக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு ஊழியஞ் செய்து, அவருடைய வாசஸ்தலத்தில் இடம் பெறுவீர், அல்லது, பரிசுத்தமான நற் செயல்கள் யாவற்றையும் உதறிவிட்டு, உங்கள் இரட்சிப்பிலே அக்கரை கொள்வோரை அலட்சியப்படுத்தி விட்டு, கடைசி நாளை சந்திக்கப்போகும் நீங்கள் முடிவில்லாத வேதனைகளை அனுபவிக்கும்போது, வேறு யாரையும் நீங்கள் குறை சொல்ல முடியாது. நீங்களே அந்நிலைக்கு முற்றிலும் பொறுப்பாவிர்கள். ஆகையால் தேவனுடைய வசனத்தின் வழியாக வழங்கும் இரட்சிப்பை நீங்கள் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? சிந்திப்பீர்! செயல்படுவீர்!

**தில்லார்டு தூர்மன்** கொசவப்பட்டி S.S. ராஜன்.

---

**சாக்குப் போக்குச் சொல்ல இடமில்லை**

**சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற அவபக்தி, துர்க்குணம் ஆகிய பொல்லாப்புக்கு எதிர் நடவடிக்கை. ஐயோ, எங்களுக்குத் தெரியாது; எங்களுக்கு ஒருவரும் சொல்லவில்லையே என்று கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது. ஏனெனில் தேவனை குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது. தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார், எப்படி வெளிப்படுத்தினார்? அவருடைய படைப்பாகிய உலகத்தையும் அதிலுள்ள உயிரினங்கள் தாவரங்கள், விண்மீன்கள் ஆகியவற்றையும் அவைகளுடைய செயல்பாடுகளையும் கவனித்தாலே போதுமே. ஆகவே சாக்குப் போக்குச் சொல்வதற்கு இடம் இல்லை,** *ரோமர் 1 - 20*

---

## ஏனென்றால் நான் அவருடைய சீஷன்

நான் வெட்கப்படாத ஐக்கியத்தின் ஓர் அங்கம்;
அவர் சாயலில் வார்பிக்கப்பட்டேன்
எனக்காக முடிவுகள் செய்யப்பட்டு விட்டது!
எனவே பின்னால் திரும்பமாட்டேன்
அஞ்சமாட்டேன்; அசையமாட்டேன்
அவர் என்னோடு இருக்கிறார்
என் விசுவாசம் தளராது!
**ஏன்னென்றால் நான் அவருடைய சீஷன்!**

என் கடந்த காலம் மீட்கப்பட்டது!
நிகழ் காலம் அர்த்தமுள்ளது
எதிர் காலம் பாதுகாப்பானது;
முன்பு தளர்ந்த ஜீவியம்
குறுக்கு வழிகள்/
அற்ப எண்ணங்கள்
சிறிய திட்டங்கள்
தரிசித்து நடந்தேன்
நான் முழங்காலில் நிற்பதில்லை!

இப்பொழுது விசுவாசித்து நடக்கின்றேன்!
பொறுமையால் சாதிக்கிறேன்
முழங்கால் ஜெபத்தால் வாழ்கிறேன்
அவரின் இரத்தத்தால் ஜெயிக்கிறேன்;
மரியாதையோ; மதிப்போ!
மயக்கமோ, மாற்றமோ!
என்னைத் தடை செய்வதில்லை!
**ஏன்னென்றால் நான் அவருடைய சீஷன்!**

என் முகம் விண்ணை நோக்கியுள்ளது;
வழி வேகமாயுள்ளது
ஆனால் குறுகலான வழி
வழி நடப்போர் சிலரே!
என் தேவன் என் தகப்பன்
எல்லாம் அவர் பார்த்துக் கொள்வார்
முதல் நூற்றாண்டு சுவிசேஷத்தை உரைக்கிறேன்
**ஏன்னென்றால் நான் அவருடைய சீஷன்!**

என்ன விலைக்கு வாங்கவோ ;
சமரசம் செய்யவோ; இயலாது;
நேராய் செல்லும் அம்பு நான்
தடை, நான் மேலே ஏறிச்செல்லும் விடை;
தரிசனம், கரிசனம், அனுதினம் எனக்குண்டு
என் தேவன் என்னை விடுவிக்க நீரிலும்,
நிலத்திலும், நெருப்பிலும், எங்கிலும் வல்லவர் ;
**ஏன்னென்றால் நான் அவருடைய சீஷன்**

என் அழைப்பு மிகப் பெரியது
நான் உலகமுழுவதும் பிரதான கட்டளையை
எடுத்துச் செல்லவேண்டும்
என்னை தடுக்காதீர், தேடாதீர், போகிறேன்.
சிலுவை என் முன்னே !
உலகம் என் பின்னே ?
அவர் வருகிறார் ஜீவன்
எனக்கும் — விசுவாசித்து கீழ்ப்படிந்தால் உனக்கும்.
**ஏன்னென்றால் நான் அவருடைய சீஷன்**

**கவிஞர் சாலோ**

## 28ம் பக்க தொடர்ச்சி

கம் ஆகியவைகளைப் பெற்றிருக்க வேண்டும். சரியான அடிப்படையின் மேல் தன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை கட்டுகிற எவரும் மேற்சொன்ன கனிகளைப் பெற்றே ஆகவேண்டும் இவைகள் நம்மிடத்தில் காணப்படவில்லையென்றால் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏதோ கோளாறுகள் இறுக்கின்றன என்று பொருள். தயவு செய்து கொத்தி எருப்போடுவோம் தண்ணீர் பாய்ச்சுவோம் தேவன் விளையச்செய்வார்.

**E.Z. செல்வநாயகம்**

# கிசுகிசுவிலும் நன்மை!

*தூஷணமும் மற்ற எந்த துர்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது (எபேசியர் 4:3)*

'காசிப்' (gossip) என்ற ஆங்கில வார்த்தைக்குத் தற்போதைய பொருள் மற்றவர்களைப்பற்றி புறணி கூறுதல் என்பதாகும். ஆனால் துவக்க காலத்தில் இந்தச் சொல் 'Godship' என்றிருந்தது. அதாவது நல்ல விஷயங்களை கூறுவது என்று பொருள்.

ஒரு கற்பனை கதையில் ஸ்மித், ஜோன்ஸ் இருவரும் ஒரே பிராந்திய சபை உறுப்பினர்களாக இருந்த போதிலும் எந்தவொரு காரியத்திலும் ஒத்துப்போனதில்லை. அவர்கள் ஒருவரோடொருவர் பேசுவது கூட கிடையாது. பிரௌன் என்ற மூப்பனார் இதை நினைத்துக் கவலைப்பட்டு, அவர்களை ஒப்புரவாக்க ஏதாவது செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். அவர் ஸ்மித்திடம் சென்று ''நீங்கள் ஜோன்சைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்''? என்று கேட்டார். 'இருப்பதிலேயே படுமோசமானவன் அவன் தான்' என்றார் ஸ்மித். ஆனால் அவர் தனது குடும்பத்தை நன்றாகக் கவனிக்கிறார் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்' என்றார் பிரௌன். 'ஆமாம் அவன் தன்னுடைய குடும்பத்தை நன்றாகத்தான் கவனிக்கிறான் என்று ஒப்புக்கொண்டார் ஸ்மித்.

அடுத்த நாள் ப்ரௌன் ஜோன்சிடம் சென்று 'நீங்கள் உங்கள் குடும்பத்தை நன்றாக கவனிக்கிறீர்கள் என்று ஸ்மித் சொல்கிறார் என்றார். 'அவரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்'? என்று மேலும் கேட்டார் 'அவனா? அவன் ஒரு முட்டாள்' என்றார் ஜோன்ஸ், ஆனாலும் அவர் தனது வியாபாரத்தில் நேர்மையானவர் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்' என்றார் ப்ரௌன். 'ஆமாம் அவன் வியாபாரத்தில் நேர்மையானவன் தான்' என்று ஒப்புக்கொண்டார் ஜோன்ஸ்.

மூப்பனார் மறுநாள் ஸ்மித்திடம் சென்றார். 'நீங்கள் வியாபாரத்தில் நேர்மையானவர் என்று ஜோன்ஸ் கூறியது உங்களுக்குத் தெரியுமா'? என்று கேட்டார். 'அப்படியா?' என்று வியப்புடன் கூட உள்ளூர மகிழ்ச்சியும் அடைந்தார் ஸ்மித். ஞாயிற்றுக்கிழமை

யன்று ஸ்மித்தும் ஜோன்சும் ஆலயத்தில் ஒருவரையொருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டார்கள். மூப்பனாரும் தனது ஓப்புரவாக்கும் பணியைத் தொடர்ந்து செய்துகொண்டே வந்தார் அடுத்த சபை அலுவல் கூட்டத்தில் ஸ்மித், ஜோன்ஸ் இருவரும் ஓரிரு வார்த்தைகள் பேசிக் கொண்டார்கள். இருவரும் ஒரே நபருக்கு வாக்களித்தார்கள்! மூப்பனார் பிரௌனைப் போன்று நன்மை தரும் கிசுகிசுக்களைக் கூறுபவர்கள் நமது சபையிலும் தேவை.

மற்றவர்கள் உங்களைப் பற்றி எவ்வாறு பேச வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அவ்வாறே அவர்களைப் பற்றி பேசுங்கள்.

ஏசையன்

**மானிடனே, சிந்தி, சீர்படு.**

இன்று நாம் கண்டும் கேட்டும் மன வேதனை அடைகிற ஆண்புணர்ச்சிசுபாவத்துக்கு விரோதமான பால உறவு, புத்தி தடுமாற்றம், கெடுமதி, பேராசை, பொறாமை, கொலை, சண்டை, கபடம் வஞ்சகம், புறங்கூறல் அவதூறு பேசும் தன்மை தெய்வ மறுப்பு, மூர்க்கக் குணம், இறுமாப்பு வீண்பெருமை, பொய் புனைவதில் திறமை பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை, வாக்குத் தவறுதல், அன்புத் தாழ்ச்சி, இச்சகம் பேசுதல் ஆகிய துர்க்குணங்கள் மனித சமுதாயத்தைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறது. மானிடனே, சிந்தி மனந்திரும்பி கர்த்தரை ஏற்றுக்கொள். வாழ்வடைவாய்.

(ரோமர் 1: 29 - 32)

# கைகளோ ஏசாவின் கைகள்; சத்தமோ யாக்கோபின் சத்தம்

தற்காலத்தில் மக்கள் மத்தியில் மாபெரும் பக்தி பரவசம் ஏற்பட்டு விட்டதோ என்று எண்ணத் தோன்றும் அளவுக்கு எங்கு பார்த்தாலும் நற்செய்தி கூட்டங்கள் வீதிக்கு வீதி தெருப் பிரசங்கங் கள் ஆலயங்கள் தோறும் மக்கள் வெள்ளம், வானொலிகளில் நாள்தோறும் பல்வேறுகூட்டத்தினரின் செய்திகள் இப்படி பலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகளெல்லாம் பாராட்டத்தக்க நல்ல அம்சங்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவைகளால் நாம் எதிர் பார்க்கிற அளவுக்கு நன்மைகள் ஏற்பட்டு வருகிறதா? மற்ற மதத்தினர் அஞ்ஞான இருளில் சிக்கித் தவித்துக் கொண்டிருப்பதாக நாம் எண்ணி கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் அந்த மக்கள் நம்முடைய பக்திமுறைகளைப் பற்றி என்ன அபிப்பிராயப் படுகின்றனர் மத மாற்றத்தைப் பற்றிய புள்ளி விவரங்கள் கூறுகிற உண்மை-யென்ன? அப்படி மதம் மாற்றப்பட்டவர்கள் உண்மையிலேயே மனம் மாற்றம் பெற்றிருக்கிறார்களா? என்று சிந்திக்கத் தலைப்பட்டால் நாம் விரும்புகிற அளவுக்கு திருப்திகரமான பதில் கிடைக்காது; பாவக் கறைகள் நீங்கி இரட்சிக்கப்பட்டு விட்டோம் என்று சுயதிருப்திப்பட்டுக் கொள்ளும் நம் கிறிஸ்தவ மக்களுடைய வாழ்க்கையை வினயத்தோடும் வியப்போடும் கூர்ந்து கவனித்துப் பார்க்கும் மனி-தன், வாழ்க்கையில் இரட்சிக்கப்பட்ட மக்களுக்கு இருக்க வேண்டும் என்று வேதாகமம் கூறுகின்ற நற்பண்புகளைத் துருவித் தேடிப் பார்த்தும் காணமுடியாமல் ஏமாற்றத்தோடும் வெறுப்போடும் திரும்பச் செல்லவேண்டிய நிலைதான் உள்ளது''. மாயக்காரராகிய வேதபாதகரே! பரிசேயரே, உங்களுக்கு ஐயோ! ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குறீர்கள்.) மத். 23:15.

ஆம் சகோதரர்களே! எங்கும் எதிலும் போலித்தனம் பரவி விட்டதைக் காணும்போது நமக்கே மிகுந்த மனவேதனை ஏற்படு-கிறது என்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு எப்படியிருக்கும்? வஞ்சகப் பிசாசின் சூது மதியால் பிதாவாகிய தேவனோடு மானிடர் கொண்டிருக்க வேண்டிய நல்லுறவை இழந்து பாவத்திலும், துக்கத்திலும், கண்ணீரிலும் சிக்கித் தங்களுடைய வாழ்க்கையில் நிம்மதியி-ழந்து அவதியுறும் மக்களின் துயர் துடைத்துக் கரையேற்றுவதற்-

கென்றே இவ்வுலகுக்கு வந்தார். லூக்கா 19:10. விண்ணுலகில் தேவனுக்கு சமமாக சகல சிறப்புகளையும் பெற்றிருந்தும் அவற்றை உதறித் தள்ளிவிட்டு ஏழையின் வயிற்றிலே பிறந்து, தாழ்மைக்கு எடுத்துக்காட்டாக வாந்தார். (பிலி 2:6-8) இன்னல்கள் பலபட்டு இன்னுயிரைக் கொடுத்து இவ்வுலக மக்களை இரட்சிக்க வேண்டும் என்றே உதித்த இயேசு பெருமான் மனம் வேதனையடைவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

வாரினால் அடித்தார்கள்-வாய் திறக்கவில்லை, தலையிலே குட்டி முகத்திலே துப்பி ஏளன சிரிப்புச் சிரித்தனர்-எரிச்சலடைய-வில்லை. தாகத்தால் நாவறண்டு தண்ணீர் கேட்டார்- கசப்புக் கலந்த காடியைக் கொடுத்தார்கள்-கடுமொழி ஒன்றும் கூறிட-வில்லை. பொன் மகுடம் சூட்டவேண்டிய தலையில் முள்முடி, முட்கள் அழித்தியதால் குருதி கொட்டுகிறது-குமுறி எழவில்லை. பாரச்சிலுவையைச் சுமக்க முடியாமல் கால்கள் பின்னுகின்றன—காரணம் கேட்கவில்லை. நன்மை செய்பவராகச் சுற்றித் திரிந்த-வரின் கால்களிலும் கரங்களிலும் ஆணிகள்-நா அசைத்தார், சபிக்க-வல்ல-பிதாவினிடத்தில் அவர்களுக்காக மன்னிப்புக் கேட்டு மன்றாட.

தன்னைச் சித்திரவதை செய்த மக்களின் அறியாமையை மன்னிக்க வேண்டும் என்று மன்றாடுகிற இம்மகான் பரிசேயரை-யும், வேதபாரகரையும் பார்த்து 'குருட்டு வழிகாட்டிகள்' என்-கிறார். ,வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறை' என்கிறார், சர்ப்பங்-களே, விரியன் பாம்புக் குட்டிகளே என்கிறார். அப்பப்பா! எவ்-வளவு கடுமை! ஏன் அவர்கள் மீது மாத்திரம் ஆண்டவருக்கு அவ்வளவு கோபம் சொல்லப் போனால் மற்ற பிரிவைச் சேர்ந்த யூதர்களைக் காட்டிலும் இவர்கள் நியாயப் பிரமாணத்தை முறை-யாகக் கற்றவர்கள். நியாயப்பிரமாணத்தின்படி மிகவும் கவனமாக நடப்பவர்கள். இருந்தும் அவர்களையே குறிவைத்துத் தாக்கு-கிறாரே!

சமுதாயத்தின் உயர்ந்த இடத்தில் அமர்ந்திருக்கும் இந்த பெரிய மனிதர்களின் கோபத்திற்கும் வெறுப்புக்கும் ஆளானால் தன் உயிருக்கே ஆபத்து நேரிடும் என்று தெரிந்தும் சமயம் கிடைத்த போதெல்லாம் சாட்டையடி கொடுப்பது போல சாடு-கிறார், ஏன்? ஏன்? ஏனெனில் அவர்களுடைய தவறுகளை அவர்-கள் உணர மறுத்து, போலி பக்தியில் மோகங்கொண்டு, தேவனு-டைய ஆலோசனைகளையும் திட்டங்களையும் அறிந்து கொள்ள

விருப்பமற்றவர்களாக இருந்தார்கள். வெளிவேஷத்திஷல் பிரியப்பட்டார்கள். வெளியிலே பார்ப்பவர்களுக்கு பக்திமான்களைப் போலவும், கடவுளின் உண்மைத் தொண்டர்களைப் போலவும், மாயமான தாழ்மையுடன் பாசாங்கு செய்தார்கள். ஆனால் எல்லா விதமான அக்கிரமங்களையும் கூசாமல் நடப்பித்துக் கொண்டு தேவனுடைய ஆலோசனைச் செவி கொடாமல் தங்களுடைய செல்வாக்கையும், செல்வத்தையும் பெருக்கிக் கொள்வதில் கவனமுள்ளவர்களாக இருந்தார்கள் இவைகளே அவருடைய ஆத்திரத்துக்குக் காரணம் இயேசு கிறிஸ்துவின் இனிய பண்புகளுக்கும் இரக்கசுபாவத்துக்கும் முற்றிலும் முரண்பாடான முறையில் அத்திமரம் ஒன்றைச்சபிப்பதை மத்தேயு, மாற்கு ஆகிய சுவிசேஷங்களில் நாம் வாசிக்கிறோம். (மத் 21:18-32, மாற்கு 11:12-14) ஏன் அதைச் சபித்தார்? என்னுடைய பசியைப் போக்குவதற்கு பயனில்லாத மரம் நாசமாகட்டும் என்று சபித்திருப்பாரா? நிச்சயமாக அப்படி இருக்க முடியாது. பிசாசினால் வனாந்திரத்திலே சோதிக்கப்பட்ட நேரத்தில் நாற்பது நாள் இரவு பகல் பட்டினியைச் சகித்துக்கொண்டு' மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல. தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று தெளிவாய்க் கூறினவர் சமாரிய நாட்டுச் சீகார் என்னும் சிற்றூரில் வயிற்றுக்குத் தேவையான உணவைவிட என்னை அனுப்பினவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதுதான் சிறந்த உணவு என்று கூறி பசியை மறந்து தெய்வத்திருப்பணியில் ஈடுபட்டவர் (யோவான் 4;31 ff) கேவலம் தனக்குப் பயன்தராதது அழிந்தொழியட்டும் என்ற கீழ்த்தரமான வாழ்க்கை நெறியாளர்களுடைய நிலைக்குத் தாழ்ந்து விடுவாரோ? சர்வ நிச்சயமாக இருக்கவே இருக்காது.

பொறுமைக்கும் சகிப்புத் தன்மைக்கும் சாத்வீகத்துக்கும் உறைவிடமான நமது கர்த்தர் 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்ற பாணியில் ஆத்திரமடைந்து சபித்திருப்பாரா? கற்பனை செய்து பார்க்க முடியாத குற்றச்சாட்டு. பின்னர் என்னதான் காரணமாக இருக்க முடியும்? தூரத்திலிருந்து பார்க்கும் பொழுது செழித்து வளர்ந்து பசுமையாகத் தோற்றமளித்த அந்த அத்திரம், மரங்களின் சிறப்பு நிலையாகிய கனி கொடுக்கும் நிலையில் இல்லாததுதான் அவருக்கு ஆத்திரம் உண்டாக்கிய காரியம்—தோற்றம்; ஒன்று நிலைமை வேறு; சொல் ஒன்று; செயல் வேறு இதுதான் இரட்சகரின் கோபத்துக்கு காரணம் குற்றங்கள் குறைகள் இருப்பது மனித

இயல்புதான். அது ஆண்டவருக்குத் தெரியாததல்ல. இல்லாத ஒன்றை இருக்கிறமாதிரி காட்டுகிற போலித்தனத்தையே கர்த்தர் வெறுக்கிறார்.

தேவனுடைய உன்னதமான நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கிற மக்களே! நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அதன் பலனை மறுத்தலிக்கிறவர்களாக இருக்கிறோமோ? அல்லது நாம் இந்த உலகத்துக்கு வெளிச்சமாகவும் பூமிக்கு உப்பாகவும் இருக்கிறோமோ? தயவு செய்து சிந்தித்துப் பார்ப்போம். தேவன் அன்புள்ளவர், கிருபையுள்ளவர், இரக்கமுள்ளவர், பொறுமையுள்ளவர் என்பது மெய்தான். அதே நேரத்தில் நீதியுள்ளவர், பாராபட்சமில்லாதவர், எரிச்சலுள்ளவர் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. நம்மீது இரக்கமும் அன்பும் கொண்ட காரணத்தினால் தம்முடைய ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்துக்குத்தந்தருளினார். (யோவான் 3:16) நம்முடைய பலவீனங்களைப் புரிந்து கொண்டதினால்தான் நாம் அன்றாடம் செய்து வருகிற பலவிதமான தீச்செயல்களைப் பொறுமையோடு சகித்துக் கொண்டுவருகிறார். ஆனால் எல்லாவற்றுக்கும் ஒரு எல்லையும் ஒரு முடிவும் உண்டு என்பதை மறந்துவிடலாமா?

நம்மைக் காட்டிலும் சடங்காச்சாரங்களில் அதிக கவனம் செலுத்திக்கொண்டு, தங்கள் சுய நீதியில் பெருமைகொண்டு வாழ்ந்த பரிசேயர்களையே விட்டு வைக்காமலும் தயவு தாட்சண்யம் காட்டாமலும் சாடி, ''மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுங்கள்'' என்று சூடான அறிவுரை கூறுகிறார். எவ்வளவுதான் உறுதியுள்ளதாக இருந்தாலும் என்னதான் பசுமையான தோற்றமுள்ளதாக, இலைகள் நிறைந்ததாக காட்சியளித்த போதிலும் மரத்தின் தலையாய நிலை கனி கொடுப்பதுதான். அதுபோல ஒரு கிறிஸ்தவன் எவ்வளவு பக்திமுயற்சிக் காரியங்களில் ஈடுபாடு கொண்டு, என்னதான் ஆசீர்வாதங்களையும், வரங்களையும் பெற்றிருந்தாலும், தன்னுடைய வாழ்க்கையில் ஆவியின் கனிகளைத் தராத வரையில் அவனுடைய ஆசீர்வாதம் நிறைவு பெற்ற தாகாது. தேவன் அங்கீகரிக்கும் வாழ்வை ஒருவன் விரும்பினால் அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற கனிகளாகிய அன்பு, சந்தோசம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்-

 (22-ம் பக்கம் பார்க்கவும்)

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays - 1:45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bibie Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

**ஜெபியுங்கள்! வருகை தாருங்கள்!**

## திருமறை ஆசான் 6வது ஆண்டுவிழா
&
## கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் கருத்தரங்கம்

நிகழ்வு நாள் : 26–1–93 **செவ்வாய்க்கிழமை**

நேரம் : **காலை 9 மணி முதல் மாலை 6 வரை**

இடம் : **சி.எஸ்.ஐ. ஆசிரியர் பயிற்சி நிறுவனக் கலையரங்கம், ஈரோடு** 638 001.

(சி. எஸ். ஐ. மெட்ரிகுலேஷன் பள்ளி சமீபம்)

அனுமதி இலவசம்! அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மேலும் விபரங்களுக்கு *1993* ஜனவரி திருமறை ஆசான் இதழ் காண்க.

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

If undelivered please return to:
The Editor
**THIRUMARAI AASAAN**
Post Box No: 58 ERODE-638 001.

TO

PRINTED MATTER BOOK-POST